# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 105/மா/2023**

**நாள் : 18.05.2023**

திருமதி. A. நாகூரம்மாள்,
மேலப்பாளையம், திருநெல்வேலி – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி – எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம், நேதாஜி ரோடு, 51–பூ நகர், மனை எண்.48–ல் வசிக்கும் திருமதி. A. நாகூரம்மாள் அவர்களின் 16.04.2023 நாளிட்ட மனு 26.04.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 105/மா/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம், நேதாஜி ரோடு, 5–பூ நகர், மனை எண்.48–ல் வசிக்கும் திருமதி. A. நாகூரம்மாள் அவர்கள் தனது 16.04.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“ மனுதாரர் வசித்து வரும் வீடு, காலிமனையாக வாங்கப்பட்டு திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகத்திடம் முறையாக கட்டிட வரைபட அனுமதி பெற்றுகட்டப்பட்ட வீடு ஆகும். கட்டிடம் கட்டி முடித்தபிறகு மேற்படி வீட்டிற்கு புதிதாக சொத்து வரி வரிவிதிப்பு செய்வதற்கு திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகத்திற்கு மனு அளித்தார். மனுவின் மீது நடவடிக்கை எடுத்து, மாநகராட்சி அதிகாரிகள் மேற்படி வீட்டிற்கு நேரடியாக வந்து வீட்டை ஆய்வு செய்தார்கள். ஆய்வு செய்துவிட்டு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்ற பரப்பளவைவிட அதிகமாக மனுதாரர் வீடு கட்டியுள்ளதாக

தெரிவித்து அதற்கு பணம் செலுத்துவதற்கு அறிவிப்பு கொடுத்தார்கள். மனுதாரர் அனுமதி பெற்ற பரப்பளவை விட அதிகமாக கட்டிடம் கட்டவில்லை என்பதை தெரிவித்தும் அதிகாரிகள் கேட்கவில்லை. பணம் செலுத்தினால் மட்டுமே சொத்துவரி செலுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை உறுதியாக தெரிவித்துவிட்டார்கள். மனுதாரர் வீட்டில் குடியேறவேண்டும் வீட்டு தீர்வை செலுத்தினால்தான் மற்ற காரியங்களை பார்க்க முடியும் என்ற சூழ்நிலை இருந்ததால் அதிகாரிகள் தெரிவித்த பணத்தை செலுத்தி விட்டார். பணத்தை செலுத்தியபின்பு பார்த்தால், மனுதாரர் ஏற்கனவே செலுத்திய பணத்தை மறுபடியும் செலுத்த அறிவிப்பு செய்து மனுதாரிடம் மறுபடியும் பணத்தை வசூல் செய்துள்ள விபரம் தெரிய வந்தது. மேலும் அனுமதி பெற்ற பரப்பளவைவிட அதிகமாக மனுதாரர் கட்டிடம் கட்டவில்லை என்ற விபரமும் தெரிய வந்தது. ஒரு வகையில் பார்த்தால் மனுதாரரின் அவசர சூழ்நிலையை கருத்தில் எடுத்துக்கொண்டு மனுதாரரை பயமுறுத்தி ஏற்கனவே செலுத்திய பணத்தை மறுபடியும் வாங்கிவிட்டார்கள்.

அதன்பின், மனுதாரர் அதிகாரிகளிடம் தான் அனுமதி பெற்ற பரப்பளவை விட அதிகமாக கட்டவில்லை குறைவாகதான் கட்டியுள்ளார் என்பதை தெரிவித்து கணக்கை மறுபடியும் சரி பார்க்க சொன்னதின்பேரில் கணக்கை பார்த்தால் அனுமதி பெற்ற பரப்பளவை விட அதிகமாக கட்டிடம் கட்டவில்லை என்ற விபரமும், மனுதாரர் 16.11.2022 ஆம் தேதியில் செலுத்திய தொகை அதிகமாக செலுத்தப்பட்ட தொகை என்ற விபரம் தெரிய வந்தது. அதன்பின் அதிகாரிகள் மேற்படி தொகையை மனுதாரரின் வீட்டிற்கு குடிநீர்சப்ளை கொடுப்பதற்கு செலுத்த வேண்டிய பணத்தில் அதை சரி செய்துவிட்டு மீதி பணத்தை மனுதாரருக்கு திரும்ப தருவதாக தெரிவித்தார்கள்.

அதன்படி, மனுதாரர் தன்னுடைய வீட்டிற்கு குடிநீர் சப்ளை வழங்குவதற்கு மனு அளித்தார். மனுவை பரிசீலனை செய்து, குடிநீர் சப்ளை வழங்குவதற்கு ரூபாய் 14,040/– செலுத்துமாறு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இந்த பணத்தை, மாநகராட்சி நிர்வாகம் மனுதாரரிடமிருந்து அதிகமாக (two times) வசூல் செய்த வகையில் மனுதாரருக்கு, மாநகராட்சி நிர்வாகம் திரும்ப வழங்க வேண்டிய ரூபாய் 25,277/– ல் சரிசெய்து விட்டு மீதி பணத்தை தருமாறு பல தடவைகள் மாநகராட்சி நிர்வாகத்தை கேட்டுள்ளார். எந்த அனுகூலமான பதிலும் வரவில்லை. எனவே 28.02.2023 ஆம் தேதியில் உயர்திரு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மனுதாரர் ஒரு புகார் மனு அளித்தார். அந்த மனுவின் நகல், மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான பார்வைக்கும் பரிசீலனைக்கும் இணைத்துள்ளேன்.

தற்போது, மனுதாரர், கடன் வாங்கி வீட்டை கட்டி முடித்து விட்டு கடனை திருப்பி செலுத்துவதில் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார். இதில் ரூபாய் 25,277/– என்பது சாதாரண விசயம் அல்ல. மேலும் குடிநீர் என்பது மனிதனுக்கு அத்தியாவசிய தேவை. குடிநீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார். இதனால் குடும்பத்திற்குள் கணவன் – மனைவிக்கு இடையில் மிகுந்த சங்கடங்கள் ஏற்படுகிறது. மாநகராட்சி நிர்வாகத்திடமிருந்து சீக்கிரம் குடிநீர் சப்ளையை பெறுங்கள் என்று கணவரிடம் சொன்னால்,அவர் உடனே மனுதாரிடம் ரூபாய் 15,000/– கேட்கிறார். இதுபோக இந்த மாநகராட்சி நிர்வாகம் மனுதாருடைய வீட்டிற்கு அதிகமாக வீட்டு தீர்வை செலுத்த சொன்னார்கள். இந்த வீட்டு தீர்வையும் மிகவும் அதிகம். அக்கம் பக்கத்தில்

புதிதாக வீடு கட்டியுள்ளவர்களுக்கு வரிவிதிப்பு செய்ததை விட மனுதாரருக்கு அதிகமாக சொத்து வரி வரிவிதிப்பு செய்துவிட்டார்கள். அதை கேட்டால் அதற்கும் ஒரு காரணம் சொல்லுகிறார்கள். அந்த காரணம் ஏற்றுக்கொள்ளகூடியதல்ல.

மொத்தத்தில், இந்த மாநகராட்சி நிர்வாகம் மனுதாரரை வயதான காலத்தில் அதிகமாக மன சங்கடப்படுத்த வைத்துவிட்டது. இந்நேர்வில் குடிநீருக்காக மனுதாரர் மிகவும் கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின்படி, அரசாங்கம் ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிப்படை தேவைகளை வழங்க வேண்டும். அதில் ஒன்று தான் நன்குடிநீர். அந்த நன்குடிநீர் கிடைக்காமல் மனுதாரர் மிகவும் கஷ்டப்படுகிறார்.

எனவே மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் மனுதாரருடைய மனுவையும், ஆவணங்களையும், சூழ்நிலைகளையும் கவனமாக பரிசீலனை செய்து குடிநீர் சப்ளை வழங்குவதற்கும், மாநகராட்சி நிர்வாகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபாய் 14,040/– யை அதிகமாக செலுத்திய தொகையில் சரி செய்யவும், மீதி தொகையை திரும்ப வழங்கவும், மேலும் உடனடியாக மனுதாரர் வீட்டிற்கு குடிநீர் சப்ளை வழங்கவும் உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர், மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவுடன் பிரார்த்திக்கின்றேன்" என தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 03.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருநெல்வேலி மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது.**

திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் தனது 09.05.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

மனுதாரர் திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் புதியதாக வரிவிதிப்பு செய்ய கடந்த 14.09.2022ம் தேதி மனு செய்துள்ளார். அன்னாருடைய மனுவில் கட்டிட வரைபட திட்ட அனுமதி மற்றும் வரைபட அனுமதி ஆணை இணைக்கப்படவில்லை. எனவே வரைபட திட்ட அனுமதி பெறப்படாத காரணத்தினால் மாநகராட்சி திட்ட பிரிவு 283ன் கீழ் அனுப்பப்படும் அறிவிப்பின்படி அன்னாருக்கு கீழ்க்கண்ட விபரப்படி அபராதத்தொகை அறிவிப்பு அனுப்பப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | Building Licence fee | ரூ. 6468 |
| 2. | Building materials storage fees | ரூ. 8918 |
| 3. | Member secretry (A/c) | ரூ. 980 |
| 4. | Labour Welfare Board | ரூ. 8811 |
| | **Total** | ரூ. 25177 |

இதனை அன்னார் 15.11.2022ம் தேதி செலுத்தியுள்ளார். பின்னர் அன்னார் மேற்கண்ட கட்டிடத்திற்கு வரைபட ஆணை பெற்றுள்ளதை தெரிவித்து அதன் நகலினை அலுவலகத்தில்

சமர்ப்பித்துள்ளார். அதன் அடிப்படையில் 25.11.2022ம் தேதி புதியதாக எந்தவித அபராதத்தொகையும் இன்றி சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அன்னார் கீழ்க்கண்ட விபரப்படி கட்டிடம் கட்டியுள்ளார்.

| கட்டிட அனுமதி | கட்டப்பட்ட அளவு | UAC |
|---|---|---|
| 1327 | 1208 | – (நகல் இணைக்கப்பட்டுள்ளது. |

எனவே மனுதாரரது கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆணை மற்றும் வரைபட நகல் சமர்ப்பிக்காததுடன் ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட விவரத்தை மண்டல அலுவலகத்திற்கு தெரிவிக்காமல் விட்டுவிட்டார். அதன் காரணத்தினால் தான் விதிகளின்படி தொகை செலுத்த அறிவுறுத்தப்பட்டது. முழுவதும் மனுதாரரது குளறுபடி காரணமாக நடந்துள்ளது. எவ்விதமான பயமுறுத்தலும் மாநகராட்சியால் ஏற்படுத்தப்படவில்லை.

தற்போது ஈடு செய்து குடிநீர் சப்ளை வழங்க பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மீதித்தொகை 15386/– அன்னாரது கணக்கு எண் 0484000109137225 பஞ்சாப் நேஷனல் வங்கி, திருநெல்வேலி டவுன் கிளைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் சப்ளை பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. புதிய வீட்டு தீர்வை மாநகராட்சி விதிகளின்படி விதிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் ஆவணங்களை சரியாக சமர்ப்பிக்கப்படாத காரணத்தினாலும் அன்னாரது குளறுபடியான நடவடிக்கையாலும் இந்நிகழ்வு நடைபெற்றது. தற்போது மனுதாரரது கோரிக்கையான குடிநீர் இணைப்பு மற்றும் மீதித்தொகையும் திரும்ப அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கை மனுதாரருக்கு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 11.05.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் உடல்நிலை சரியில்லாத காரணமாக 11.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.**

**திருநெல்வேலி மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் 11.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

"திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் வார்டு 52, பூ நகர் மனை எண் 48ல் அமைந்துள்ள மனுதாரரின் வீட்டிற்கு சொத்து வரிவிதிப்பு செய்ய 14.09.2022 அன்று மனு செய்திருந்தார். மனுவை அளிக்கும்போது Building Licence Fee ரூபாய் 6468/–ம், Building Materials Storage fee ரூபாய் 8918/–ம் Labour Welfare Board ரூபாய் 8811/–ம் மற்றும் Member Secretary Local Planning Authorityக்கு இந்தியன் வங்கியில் செலுத்திய தொகையாக ரூபாய் 980/–ம் ஆக மொத்தம் மனுதாரரிடமிருந்து ரூபாய் 25,177/– பெறப்பட்டது. ஏற்கனவே கட்டட அனுமதி பெறும்போது 22.01.2021 அன்று ஏற்கனவே மேற்கண்ட அனைத்து தொகையையும் அதாவது ரூபாய் 28387/– கட்டிய விவரத்தை மாநகராட்சியில்

தெரிவிக்காததாலும், தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்காததாலும் மனுதாரரிடம் மேற்கண்ட ரூபாய் 25,117/– மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டது. மனுதாரருக்கு மாநகராட்சியில் நிலுவையில் உள்ள அவருக்கு சேர வேண்டிய தொகை குறித்து கீழ்க்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| மனுதாரர் திருமதி நாகூரம்மாள் திட்ட அனுமதிக்காக கட்டிய தொகை | ரூபாய் 25,177/– |
| மனுதாரருக்கு திரும்ப அளிக்கப்பட்ட தொகை | ரூபாய் 15,386/– |
| **மேற்கண்ட மனுதாரருக்கு திருப்பி அளிக்கப்பட வேண்டிய தொகையான ரூபாய் 15,386/– மனுதாரரின் வங்கிக்கணக்கில் 09.05.2023 அன்று செலுத்தப்பட்டுவிட்டது.** | |

மனுதாரர் செலுத்திய ரூ.25,177/– ல் ரூ.15,386/– திருப்பி அளித்ததை தொடர்ந்து மனுதாரருக்கு திருப்பி அளிக்கப்பட வேண்டிய மீதத்தொகை ரூபாய் 9,791/– அதன் விவரம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| Member Secretary Local Planning Authority இந்தியன் வங்கியில் செலுத்திய தொகையாக | ரூ.980/– |
| Labour Welfare Boarding | ரூ.8811/– |
| மொத்தம் | ரூ.9791/– |
| மேற்கண்ட தொகை மாநகராட்சி கணக்கில் வரவமைக்கப்படாததால் Member Secretary Local Planning Authority அலுவலகம் மற்றும் Labour Welfare Board அலுவலகத்திற்கும் விரைவில் கடிதம் அனுப்பப்படவுள்ளது. | |

மனுதாரர் புதிய குடிநீர் இணைப்பு வேண்டி மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை பின்வருமாறு:–

| | |
|---|---|
| மேற்கண்ட மனுதாரர் வீட்டுத்தீர்வை நிர்ணயம் செய்யப்பட்டவுடன் குடிநீர் இணைப்புக்கட்டணமாக செலுத்த வேண்டிய தொகை | ரூ.14040/– |
| குடிநீர் இணைப்புக்காக மனுதாரர் மாநகராட்சிக்கு செலுத்திய தொகை | ரூ.5,000/– |
| மீதம் | ரூ.9040/– |

மேற்கண்ட மீதம் ரூபாய் 9040/— மனுதாரரால் 08.05.2023 அன்று மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டு அன்றைய தினமே மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. எனவே மனுதாரருக்கு மாநகராட்சியிடமிருந்து அளிக்கப்பட வேண்டிய தொகை ஏதும் நிலுவையில் இல்லை. எனவே மனுதாரரின் கோரிக்கை முழுவதும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திருமதி.நாகூரம்மாள் மாநகராட்சிக்கு திட்ட அனுமதிக்கு கட்டிய தொகை ரூபாய் 25,177/—ல் குடிநீர் இணைப்புக்காக தொகையாக ரூ.14,040/— போக செலுத்திய தொகையில் சரி செய்து மீதி தொகையை திரும்ப வழங்கிட கோரியுள்ளார்.

திருநெல்வேலி மாநகராட்சி அலுவலர் தனது வாக்குமூலத்தில் மனுதாருக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது எனவும் மாநகராட்சியிடமிருந்த அளிக்கப்பட வேண்டிய தொகை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரின் மனு, திருநெல்வேலி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம், மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014ம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவுகள் மற்றும் விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –
(ii) ( c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules—ன்படியும், மற்றும்

12. (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

(d) Order other necessary remedial measures considering the facts and circumstances of the case மற்றும்

Tamil Nadu Urban Local Bodies Act 1998ல் வரையறுக்கப்பட்டுள்ள பிரிவு 82 Levy of Property tax அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

"திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் வார்டு 52, பூ நகர் மனை எண் 48ல் அமைந்துள்ள மனுதாரரின் வீட்டிற்கு சொத்து வரிவிதிப்பு செய்ய 14.09.2022 அன்று மனு செய்திருந்தார். மனுவை அளிக்கும்போது Building Licence Fee ரூ.6468/—ம், Building Materials Storage fee ரூ.8918/—ம் Labour Welfare Board ரூ.8811/—ம் மற்றும் Member

Secretary Local Planning Authorityக்கு இந்தியன் வங்கியில் செலுத்திய தொகையாக ரூபாய் 980/–ம் ஆக மொத்தம் மனுதாரரிடமிருந்து ரூபாய் 25,177/– பெறப்பட்டது. ஏற்கனவே கட்டட அனுமதி பெறும்போது 22.01.2021 அன்று ஏற்கனவே மேற்கண்ட அனைத்து தொகையையும் அதாவது ரூபாய் 28387/– கட்டிய விவரத்தை மாநகராட்சியில் தெரிவிக்காததாலும், தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்காததாலும் மனுதாரரிடம் மேற்கண்ட ரூபாய் 25,117/– மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டது. இந்த தொகையில் ரூ.15,386/– மனுதாரரின் வங்கிக்கணக்கில் 09.05.2023 அன்று செலுத்தப்பட்டு விட்டது. மீதித்தொகையான ரூ.9791/– மாநகராட்சி கணக்கில் வரவழைக்கப்படாததால் Member Secretary Local Planning Authority அலுவலகம் மற்றும் Labour Welfare Board அலுவலகத்திற்கு இது தொடர்பாக கடிதம் அனுப்பப்படவுள்ளது எனவும் மனுதாரர் புதிய குடிநீர் இணைப்பு வேண்டி மாநகராட்சிக்கு உரிய தொகையை செலுத்தியதால் 08.05.2023 அன்று மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்றும் எனவே மனுதாரருக்கு மாநகராட்சியிடமிருந்து அளிக்கப்பட வேண்டிய தொகை ஏதும் நிலுவையில் இல்லை என்பதை திருநெல்வேலி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்தும் அறியமுடிகிறது.

மனுதாரர் மாநகராட்சி நிர்வாகத்தை பலமுறை அணுகி இதனை சரி செய்து தர கோரியுள்ளார். மேலும் மாநகராட்சி ஆணையருக்கும் புகார் மனுவினை அனுப்பியுள்ளார். மனுதாரர் இம்முறைமன்றத்தினை நாடியபிறகே மனுதாரரின் குறைகளை களையும் நடவடிக்கை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

இந்நிகழ்வில் மனுதாரரால் ஆவணங்கள் சரியாக சமர்ப்பிக்கப்படாத காரணத்தினாலும் அன்னாரது குளறுபடியான நடவடிக்கையாலும் இந்த தவறு நடந்துள்ளது என்ற விவரத்தினை ஏற்றுக்கொள்ள இயலாது. இதுபோன்று எவ்வளவு நபர்களிடம் மாநகராட்சியால் தவறுதலாக கூடுதல் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியவில்லை. இது மாநகராட்சி அலுவலர்களின் கவனக்குறைவு மற்றும் மெத்தனப்போக்கையே காட்டுகின்றது. இது போன்ற பொதுமக்களை அலைக்கழிக்கும் மற்றும் மனஉளைச்சலை உண்டாக்கும் செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும். இந்நிகழ்வுக்கு காரணமாக இருந்துள்ள சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் இதுகுறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையினரால் சிறப்பு தணிக்கை மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இதுபோன்று மாநகராட்சிகளால் தவறாக வசூலிக்கப்பட்டு சரிவர மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கப்படாமல் இருந்தால் அதனைச்சரி செய்திடவும், இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாவண்ணம் கவனமாக இருக்க ஒரு சுற்றறிக்கை எல்லா மாநகராட்சிகளுக்கும் அனுப்பவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் மனுதாரருக்கு சேரவேண்டிய தொகையான ரூபாய் 9791/– ஐ ஒரு மாதத்திற்குள் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் இதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அறிக்கையினை 45 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பவும் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி.A. நாகூரம்மாள்,
   பிளாட் எண். 48, 5 பூ நகர்,
   நேதாஜி ரோடு,
   மேலப்பாளையம்,
   திருநெல்வேலி – 627 005.

2. ஆணையர்,
   திருநெல்வேலி மாநகராட்சி,
   திருநெல்வேலி.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்